## விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2017

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 09 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 01**

நியமத்தின் 150 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் நிரந்தரமாக அமைந்துள்ள இடமும் சட்டரீதியான தன்மையும் அது அமுல்ப்படுத்தப்படும் வலயம், செயற்பாடுகளின் தன்மை அதன் பிரதான நடவடிக்கைகளின் விபரம் நிறுவனச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நியதிச்சட்டம் மீதான தொடர்பு கட்டுப்பாட்டு நிறுவனத்தின் பெயர் என்பன தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு மாறியதன் பின்னரே சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நிதியத்தின் சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 ஆம் ஆண்டின் போது உரக் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 315,000 முற்பணத்தை தீர்த்து வைப்பதற்காக 02 தீர்ப்பனவு வவுச்சர்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக இடம் பெற்ற பிழையை சரி செய்யும் போது ஏற்பட்ட பிழைகளின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதியத்தின் மீதியும் உரிய முற்பணக் கணக்கின் மீதியும் ரூபா 630,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியத்தையும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கும் போது அதற்கு ஒப்படைக்கப்பட்ட பின்வரும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூலச் சான்றுகளும் விளக்கமளித்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| (i) கடன்பட்டோர் | 11,103,076 | (i) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு<br>(ii) மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம்<br>(iii) விபரமான பட்டோலைகள் |
| (ii) விவசாயிகளின் வைப்புக்கள் | 697,644 | விபரமான வைப்புப் பதிவேடு |
| (iii) பங்குமுதல் கணக்கு | 591,965 | பங்குதாரர்களின் பெயர்ப்பதிவேடு |

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 53,269,600 தொகையான முற்பணங்கள், ரூபா 140,107,383 தொகையான பெற வேண்டிய குறுங்காலக் கடன்கள், ரூபா 178,565,300 தொகையான பெற வேண்டிய நீண்டகாலக் கடன்கள் என்பன சம்பந்தமான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 140,177,028 தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்யாது 03 ஆண்டுகளிலிருந்து 16 ஆண்டுகள் வரையான காலமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. அறவீடு செய்தல் சந்தேகத்திற்குரிய கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக ஐயக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரி செலுத்த வேண்டிய ஒரு நிறுவனமாக இருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்த வேண்டிய வருமான வரியாக ரூபா 30,204,611 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இது வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

வக்கல்மோதர உவர் நீர் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக காலி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் வானிநிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,102,500 பெறுமதியான 26 உபகரணங்கள் கிங்கங்கையில் தவலம பத்தேகம ஆகிய பிரதேசங்களில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 316,600 பெறுமதியான 2 உயர் அமுத்த உபகரணங்களும் ரூபா 600,000 பெறுமதியான Ao அச்சிடல் (Plotter) இயந்திரங்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிபிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் கமநல சேவைகள் திணைக்களத்தின் காலி மாவட்ட அலுவலகத்தின் இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிவிளைவு ரூபா 78,507,032 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,374,535 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 71,132,497 முன்னேற்றம் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வட்டி வருமானம் ரூபா 47,914,180 ஆல் குறைவடைந்தமையும் அபிவிருத்திச் செலவுகள் ரூபா 23,157,092 ஆல் குறைவடைந்தமையும் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 11,516,238 தொகையான பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 11,814,015 பற்றாக்குறையாக மாறி 2015 ஆம் ஆண்டிலிருந்து மிகையாக மாறி மீளாய்வாண்டளவில் அது ரூபா 78,507,032 வரை அதிகரித்திருந்தது. 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்திச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களை தீர்த்து வைத்தல்கள் அனைத்தும் 2014 ஆம் ஆண்டில் முன்னைய செம்மையாக்கங்கள் கணக்கிற்குச் செம்மையாக்கியதன் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான மிகை மறைப் பெறுமதியாகுவதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை, வருமான வரி, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 13,129,302 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 9,954,152 தொகையான மறைப் பெறுமதியாக இருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 80,045,382 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 (ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அதே போல சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்காக பொருண்மையான மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படாது நிதியத்தால் நிதியை முதலீடு செய்து வட்டி உழைத்தல் இடம் பெற்றிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிதியத்தால் ரூபா 775,000,000 தொகை நிலையான வைப்புக்களிலும் ரூபா 92,116,951 தொகை திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த வருமானத்தில் 98.06 சதவீதம் முதலீட்டின் மூலம் உழைத்த வட்டி வருமானமாகும். அந்த வருமானத்தில் அபிவிருத்தி செலவுகளுக்காக ரூபா 21,606,833 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அவ்வாறே தேசிய லொத்தர் சபையால் நடாத்தப்பட்டு வந்த கொவிசெத லொத்தர் வருமானத்தில் இந்த நிதியத்திற்குரிய வருமானம் 2008 ஆம் ஆண்டின் பின்னர் விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் திறைசேரியிலிருந்து விடுவிக்கபபட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,797,191,269 மீதி விவசாய நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்திற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதாக கணக்கு பதிவுகள் மூலம் காட்டப்பட்டிருந்தும் அப்பணத்தை விவசாயிகளுக்கு பராட்டுதல்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்களைத் திட்டமிட்டு அமுல்ப்படுத்துதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 2,778,635,023 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான திருத்திய செலவு மதிப்பீட்டின் மூலம் 51 செயற்திட்டங்களுக்காக ரூபா 496,818,486 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 296,818,486 கிரயமான 35 செயற்திட்டங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 168,546,076 பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க 16 செயற்திட்டங்களுக்காக ரூபா 200,070,000 தொகையான மதிப்பீட்டுப் பணம் எதுவித நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பணம் விடுவிக்கப்பட்ட 35 செயற்திட்டங்களில் ரூபா 14,892,103 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் மாத்திரம் நிதியத்தால் மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய செயற்திட்டங்கள் சம்பந்தமாக நிதியத்தால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேதன ரெட்லேடி பப்பாசி பயிர்ச் செய்கைக்காக மொரகொல்லாகமயிலுள்ள ஒரு விவசாயிக்கு ரூபா 600,000 பணம் பிணையாளரிடமிருந்து முறையான பிணைகள் பெற்றுக்கொள்ளாது 2015 நவம்பர் 16 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் வெளிக்களப் பயண அறிக்கைகளில் செயல் முன்னேற்றம் இல்லை என அறிக்கையிடப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ரூபா 400,000 தொகையான இரண்டாவது கடன் தவணைப் பணம் 2016 மார்ச் 04 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 06 ஆந் திகதி வரை கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிதியம் தவறியிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் போது சுழற்சி நிதியம் மற்றும் கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை ஒன்றிணைத்து விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் போது ஒப்படைக்கப்பட்ட ரூபா 44,200,176 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வது தொடர்பான தனது சிபார்சை 03 மாதங்களுக்குள் வழங்குவதற்கு ஓய்வு பெற்ற 10 உத்தியோகத்தர்கள் 2016 ஏப்ரல் மாதம் ரூபா 1,450,000 படியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அச்சிபார்சின் பிரகாரம் அறவிடக் கூடியவை என இனங்காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 10,874,174 மாத்திரமாக இருந்ததுடன் அவற்றிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருந்தவை ரூபா 2,351,391 ஆக 22 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

வக்மல் மோதர உவர் நீர் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் கீழ் வானிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 245,000 பெறுமதியான 10 மழைமானிகள், 07 அளவு கோல்கள், ரூபா 19,200 பெறுமதியான உருவப் படத் தரவுகளைச் சேகரிக்கும் 2 இறுதட்டுகளும் 5 ஆண்டுகளாக விளைவற்று கமநல

சேவைகள் திணைக்களத்தின் காலி மாவட்ட அலுவலக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் உத்தரவாத காலமும் கடந்திருந்தது.

**4.4 ஆளணி நிர்வாகம்**

ஒரு நிரந்தரப் பதவியணி இல்லாததன் காரணமாக கடனை அறவீடு செய்வதன் செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் இருக்கின்றமை, தீர்த்து வைக்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டிருந்தும் மீண்டும் முற்பணங்கள் வழங்கியமை, கடன்களை அறவீடு செய்வதில் கால தாமதம், அறவிடப்படாத கடனை பதிவழிக்க வேண்டியிருந்தமை ஆகியன இடம் பெற்றுள்ளதனால் நிதியத்தின் நிதி முகாமைத்துவம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக ஆக்குவதற்காக ஒரு நிரந்தரப் பதவியணியியை நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளுதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் தமது நோக்கெல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறியவாறு 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தப்படாமமையின் காரணமாக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் தமது நோக்கெல்லையின் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் அடையாளம் காணப்படவில்லை. விவசாய அமைச்சால் இனங்காணப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பாக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அதற்கிணங்க அக்கறையுள்ள தரப்பினர்களை அடையாளங் கண்டு கொள்வதற்கும் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகளை பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவுகளுக்குமிடையே 54 சதவீதத்திலிருந்து 162 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சு செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| அம்சங்கள் | | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) கடன் கட்டுப்பாடு | (i) | தாமதமின்றி கடனை அறவீடு செய்தல் மற்றும் இனங்காணப்படாத கடன் மீதிகள் சம்பந்தமாக விரைவாக நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) | கடன் வழங்குதல் மற்றும் வட்டி சதவீதம் சம்பந்தமாக பொதுக் கொள்கை ஒன்று இல்லாமை. |
| (ஆ) ஆளணி முகாமைத்துவம் | | ஒரு நிரந்தரப் பதவியணி இல்லாமை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | செயற்திட்டங்களின் பின் தொடர் நடவடிக்கை பலவீனமடைதல். |
| | (ii) | சரியான மதிப்பீடு தயாரிக்காமை. |
| (ஈ) கணக்கீடு | | வழங்கப்பட்ட முற்பணங்களை தீர்த்து வைத்தல்கள் உரிய ஆண்டில் கணக்கீடு செய்யாமை. |